# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில் 22.03.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

**“காலம் மஸீஹின் காலமாக இருந்தது.**
**வேறு யாருடைய காலமாகவும் இல்லை.**
**நான் வராதிருந்தால் வேறு யாராவது வந்திருப்பார். ”**

**பிறகு அவர்கள் ஒரு பிரசுரத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நான் இல்ஹாம் வருகிறது என்று பொய்யாக இட்டுக்கட்டி வாதம் புரிந்துள்ளதாக சில அறிவில்லாதவர்கள் கூறுகின்றனர். இது தவறாகும். உண்மையில் இது வானத்தையும் பூமியையும் படைத்த அந்த இறைவனின் பணியாகும். அவனே இந்த உலகத்தை உருவாக்கியுள்ளான். இறைவன் மீது ஈமான் குறைந்து விடும் போது என்னைப் போன்ற ஒரு மனிதர் படைக்கப்படுகிறார். இறைவன் அவருடன் பேசுகிறான். அவர் மூலமாக அவன் அற்புதமானவற்றை காட்டுகிறான். இறைவன் இருக்கிறான் என்று இதனால் மக்கள் புரிந்து கொள்கின்றனர்.

இன்று மார்ச் 22 ஆம் தேதியாகும். மார்ச் 23 ஆம் தேதி அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மஸீஹ் மவ்வூது தினம் கொண்டாடப்படுகிறது. நாளை இன்சா அல்லாஹ் மார்ச் 23 ஆம் தேதியாகும். இது தொடர்பாக நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றிலிருந்து அவர்களின் உண்மைத்துவத்திற்கான ஆதாரம், அல்லாஹ்வின் உதவிகள், காலத்தின் இமாமின் தேவை, அவர்களை ஏற்றுக் கொள்ளுமாறு அவர்கள் முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்தது ஆகியவற்றை எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணினேன். இவற்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தைகளிலேயே எடுத்துக் கூறுவேன்.

**அவர்கள் கூறுகின்றார்கள்:**

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் அடையாளங்களாகக் கூறப்பட்டுள்ள பூமியிலும் வானத்திலும் நிகழும் இயற்கை சீற்றங்கள் அனைத்தும் எனது காலத்தில் நிறைவேறி விட்டன. ரமலான் மாதத்தில் சூரிய சந்திர கிரகணங்கள் நிகழ்ந்து வெகு காலமாகி விட்டது. மேலும் வால் நட்சத்திரமும் தோன்றி விட்டது. நிலநடுக்கங்களும் வந்தன. பேரழிவை ஏற்படுத்திய நோயும் வந்தது. அதாவது பிளேக் போன்ற நோயும் பரவியது. கிறிஸ்தவ மார்க்கம் மிகவும் வலுவாக உலகில் பரவி விட்டது. முந்தைய நாட்களில் முன்னதாக எழுதப்பட்டிருந்தது போன்றே மிகவும் வலுவாக என்னை நிராகரிக்கவும் செய்தனர். அதாவது முந்தைய சான்றோர்கள் இதை எழுதி வைத்துள்ளனர். முன்னறிவிப்பு செய்திருக்கின்றனர். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவார். அவர் நிராகரிக்கப்படுவார். அவரை காஃபிர் என்றும் பொய்யன் என்றும் கூறுவர் என்று எழுதியுள்ளனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவ்வாறு எல்லா அடையாளங்களும் நிறைவேறி விட்டன. உள்ளங்களுக்கு சத்தியத்தின் பால் வழிகாட்டக் கூடிய அறிவும், நுட்பமான ஞானங்களும் வெளிப்பட்டு விட்டன.

ஆக இவற்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது உண்மைத்துவத்திற்காக எடுத்துக் கூறியுள்ளார்கள். இவ்வனைத்தும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இருந்தும் நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை.

**இவ்வாறே இன்னோரிடத்தில் அவர்கள் கூறுகின்றார்கள்:**

இயற்கை சட்டங்களையும், இயல்பையும் பின்பற்ற வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இறைவன் மிகச் சிறந்த காலத்தை வழங்கியுள்ளான். அவர்கள் எனது வாதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில்

நமது பிற எதிரிகள் மூழ்கியுள்ள சங்கடங்களில் இவர்கள் ஈடுபடவில்லை. ஏனெனில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்று இவர்கள் நன்கு தெரிந்துள்ளனர்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்று நம்புபவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதங்களை சிந்திக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

மஸீஹ் மவ்வூதைப் பற்றி ஹதீஸில் வந்துள்ளவையெல்லாம் தொடர்ச்சியாக வருகின்ற ஹதீஸ்களாகும். அவற்றை நிராகரிப்பது அறிவுடைய மனிதரின் வேலையல்ல என்றும் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியது வருகிறது.

இந்த வகையில் கண்டிப்பாக அவர்கள் ஒன்றை ஏற்றுக் கொள்ள வேண்டியது வருகிறது. அதாவது வரக்கூடிய மஸீஹ் இந்த உம்மத்தைச் சேர்ந்தவராகவே இருப்பார். எனினும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற எமது வாதத்தை ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? என்ற கேள்வியைக் கேட்பது இவர்களின் உரிமையாகும். அதாவது இந்த உம்மத்தில் மஸீஹ் மவ்வூது தோன்றுவார் என்பது சரிதான். ஆனால் நீங்கள் வாதம் புரிந்தது சரியா?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நீர் தான் என்பதற்கு என்ன ஆதாரம்? இதற்கு பதில் யாதெனில், குர்ஆனிலும் ஹதீஸிலும் எந்த காலகட்டம், எந்த நாடு மற்றும் எந்த ஊரில் மஸீஹ் மவ்வூது தோன்றுவார் என்று நிரூபணமாகியுள்ளதோ, எந்த குறிப்பிட்ட செயல்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தோற்றத்தின் நோக்கமாக கூறப்பட்டுள்ளதோ, பூமியிலும் வானத்திலும் எந்த இயற்கை சீற்றங்களை அவரது தோற்றத்திற்கு அடையாளங்கள் என்று கூறப்பட்டுள்ளதோ, எந்த அறிவையும் நுட்பமான ஞானத்தையும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் அடையாளமாகக் கூறப்பட்டுள்ளதோ அவை அனைத்தையும் இறைவன் என் காலத்திலும், என்னிடமும் என் நாட்டிலும் ஒன்றுசேர்த்து விட்டான். இன்னும் அதிக திருப்தி ஏற்படுவதற்கு வானத்தின் உதவிகளையும் எனக்காக ஒன்றுசேர்த்தான்.

**அதற்குப் பின் ஒரு ஃபார்ஸி கவிதையை எழுதியுள்ளார்கள்:**

அதன் பொருள் : எனக்கு மஸீஹின் சமுதாயத்தின் மீது ஆதிக்கம் தரப்பட்டுள்ளது. எனவே எனக்கு இப்னு மர்யம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. வானம் அடையாளங்களைப் பொழிந்து கொண்டிருக்கின்றன. இதுவே நேரமாகும் என்று பூமியும் கூறுகிறது. இவ்விரண்டு சாட்சிகளும் என்னை உண்மைப்படுத்துவதற்கு நிற்கின்றன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதற்கான விளக்கம் என்னவென்றால் திருக்குர்ஆனின் ஆதாரங்களின் மூலம் நிரூபணமாகிறது. நமது நபி (ஸல்) அவர்கள் மூஸாவிற்கு ஒப்பானவர்கள் ஆவார்கள். அவர்களின் கிலாஃபத்தின் தொடர் ஹஸ்ரத் மூஸாவின் கிலாஃபத்தின் தொடருக்கு முற்றிலும் ஒப்பானதாக இருக்கிறது. இறுதிக் காலத்தில் அதாவது இஸ்ராயீலின் நுபுவ்வத்தின் தொடர் முடிவுக்கு வரும் போது பனீ இஸ்ராயீல் தொடர் முடிவுக்கு வரும் போது பனீ இஸ்ராயீல் பல கூட்டங்களாகப் பிரிந்து விடுவர். ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தைப் பொய்ப்படுத்தும். எந்த அளவுக்கு என்றால் சிலர் சிலரைக் காஃபிர் என்று கூறுவர். அப்போது இறைவன் மூஸாவின் மார்க்கத்திற்கு ஆதரவாக ஒரு கலீஃபாவை உருவாக்குவான். அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பிறக்கச் செய்வான். அவர் பனீ இஸ்ராயீலின் பல்வேறு ஆடுகளைத் தன்னிடம் ஒன்றுசேர்ப்பார். ஓநாயையும், ஆடுகளையும் ஒன்றுசேர்த்து விடுவர் என்று வாக்குறுதி வழங்கப்பட்டது. அவர் எல்லா சமுதாயத்திற்கும் ஒரு நீதிமானாக இருந்து கருத்து வேறுபாடுகளை அவர்கள் மத்தியில் இருந்து போக்கி விடுவார். அதாவது அநீதியிழைக்கப்பட்ட சமுதாயத்தையும், அநீதியிழைத்த சமுதாயத்தையும் ஒன்றாகச் சேர்த்து விடுவார். இது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்காக கூறப்படுகிறது. அவர் காழ்ப்புணர்ச்சியையும், விரோதத்தையும் போக்கி விடுவார். இதே வாக்குறுதி குர்ஆனிலும் வழங்கப்பட்டிருந்தது. இதை ஆகரீன மின்ஹூம் லம்மா யல்ஹகூபிஹிம் என்ற இந்த வசனம் சுட்டிக் காட்டுகின்றது. ஹதீஸில் மேலும் இதுபற்றி மிகவும் விளக்கமாக உள்ளது. யூதர்கள் கூட்டங்களாகப் பிரிந்தது போன்று இந்த உம்மத்தும் கூட்டங்களாகப் பிரிந்து விடும் என்று எழுதப்பட்டுள்ளது. ஒன்று மற்றொன்றை நிராகரிக்கும்; பொய்ப்படுத்தும். இந்த அனைத்து மக்களும்

பகைமையிலும், காழ்ப்புணர்ச்சியிலும் மேலோங்குவார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நீதியுடன் தீர்ப்பு வழங்குபவராக உலகில் தோன்றாத வரை இவ்வாறே இருக்கும். அவர் நீதியுடன் தீர்ப்பு வழங்குபவராகத் தோன்றி காழ்ப்புணர்ச்சியையும் பகைமையையும் போக்கி விடுவார். அவரது காலத்தில் ஓநாயும், ஆடுகளும் ஓரிடத்தல் ஒன்றுகூடி விடும். அதாவது அநீதியிழைத்தவர்களும், அநீதியிழைக்கப்பட்டவர்களும், வலிமையுடையவர்களும், பலவீனமானவர்களும் ஒன்றுசேர்ந்து ஒரே மார்க்கத்தில் ஒன்றுகூட இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்வர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள்இஸ்ராயீல் சமுதாயத்தில் பல கருத்து வேறுபாடுகள் உருவாகிய காலத்தில் தான் தோன்றினார்கள் என்பதை வரலாறு தெரிந்த அனைவரும் நன்கு அறிவர். அவர்கள் ஒருவர் மற்றவரை நிராகரிப்பவர்களாகவும், பொய்ப்படுத்துபவர்களாகவும் இருந்தனர். அதே போன்று இந்த எளியவனும் தோன்றி இருக்கிறேன். உட்புறக் கருத்து வேறுபாடுகள் எல்லை கடந்து விட்டன. ஒரு கூட்டம் மற்றொரு கூட்டத்தை காஃபிர் என்று கூறுகின்றனர். இந்தக் கருத்து வேறுபாடுகள் நிறைந்த காலத்தில் முஹம்மதிய உம்மத்திற்கு நீதியுடன் தீர்ப்பு வழங்குபவர் ஒருவரின் தேவை இருந்தது. எனவே இறைவன் என்னை நீதியுடன் தீர்ப்பு வழங்குபவராக அனுப்பியுள்ளான்.

இன்னும் பாருங்கள்! அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் காஃபிர் என்று கூறுவதற்காக அல்லது ஏசிப் பேசுவதற்காக ஒன்றுகூடினாலும் இவர்கள் அனைவரும் ஒரு பிரிவினர் மற்ற பிரிவினரைக் காஃபிர் என்று கூறி வருகின்றனர். இவர்கள் ஒருவரைப் பற்றி மற்றவர் கூறிய காஃபிர் ஃபத்வா இன்றும் இருக்கிறது. திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு 1300 வருடங்கள் கழித்து 14வது நூற்றாண்டில் வந்தார்கள். அதே போன்று இந்த அடியேனும் இறைவன் புறமிருந்து 14வது நூற்றாண்டில் தோன்றியுள்ளேன். இது ஒரு வியக்கத்தக்க ஒற்றுமையாகும். இதனால் தான் கஷ்ஃப் பெறக்கூடியவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் 14ம் நூற்றாண்டில் தோன்றுவார் என்று கூறியுள்ளார்கள். அல்லாஹ் எனக்கு குலாம் அஹ்மது காதியானி என்று பெயர் சூட்டி இதன் பக்கம் சுட்டிக் காட்டியுள்ளான். இந்த பெயரில் 1300 எண்ணிக்கை அதாவது குலாம் அஹ்மது காதியானி என்ற பெயரில் அப்ஜத் கணக்குப்படி 1300 எண்ணிக்கை பூர்த்தியாகிறது.

மேலும் கூறுகின்றார்கள்: வரக்கூடிய மஸீஹ் 14ம் நூற்றாண்டில் தோன்றுவார் என்பதற்கு திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸில் பல ஆதாரங்கள் கிடைக்கின்றன. அவர் இஸ்லாத்தில் கருத்து வேறுபாடுகளும், பகைமையும் இருக்கும் காலத்தில் வருவார். தம்முடைய உண்மைத்துவத்திற்கு இன்னொரு ஆதாரத்தை தந்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள். ஃபுஸூஹுல் ஹகம் என்ற நூலில் சேக் இப்னு அரபி அவர்கள் தம்முடைய ஒரு கஷ்ஃபில் இவ்வாறு எழுதுகிறார்கள். அவர் காத்தமுல் விலாயத் அதாவது அவர் இரட்டைக் குழந்தையாக பிறப்பார். அவருடன் ஒரு பெண் குழந்தையும் சேர்ந்து பிறக்கும். அவரது பரம்பரை சீனாவைச் சேர்ந்ததாக இருக்கும். அதாவது அவரது மூதாதையர்கள் சீன நாட்டில் வசித்து வந்திருப்பர். இவ்வனைத்தையும் இறைவனது தீர்மானம் நிறைவேற்றி விட்டது. நான் இரட்டைக் குழந்தையாகப் பிறந்தேன் என்று இவ்வாறு எழுதி வந்துள்ளேன். என்னோடு ஒரு பெண் குழந்தையும் சேர்ந்து பிறந்துள்ளது. மேலும் எனது மூதாதையர்கள் சீனாவைச் சேர்ந்த சமர்க்கந்தில் வாழ்ந்து வந்துள்ளனர்.

அவர்கள் இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: நான் முன்பும் எழுதி வந்துள்ளேன். அதாவது **திருக்குர்ஆன் அடிப்படையில் இறைவன் புறமிருந்து தோன்றியதாகக் கூறப்படும். வாதம் மூன்று வகையில் நிரூபிக்கப்பட வேண்டும். ஒன்று,** இறைவேதம் அதன் நம்பகத்தன்மைக்கு சாட்சி கூற வேண்டும். அதாவது அந்த வாதம் இறை வேதத்திற்கு புறம்பானதாக இருக்கக் கூடாது. **இரண்டாவது,** அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் அதை உண்மைப்படுத்த வேண்டும். **மூன்றாவது,** வானத்தின் அடையாளங்கள் வாதம் புரிபவரின் வாதத்தை மெய்ப்பிக்க வேண்டும். எனவே இந்த மூன்று வகையான ஆதாரங்களின் மூலமாக எனது வாதம் உண்மை என்று நிரூபணமாகிறது. ஹதீஸின் ஆதாரங்கள் சத்தியத்தைத் தேடுபவருக்கு முழுமையான வழிகாட்டலை வழங்குகிறது.

அதாவது சத்தியத்தைத் தேடுபவராக இருப்பது இதற்கு நிபந்தனையாகும். பிடிவாதம் இருக்கக் கூடாது. சத்தியத்தைத் தேடுபவராக இருந்தால் அவருக்கு இது முழுமையான வழிகாட்டலை வழங்குகிறது. என்னுடைய வாதத்தின் மீது முழுமையான மன திருப்தியை வழங்குகிறது. அதில் ஒன்று, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இஸ்ராயீலைச் சேர்ந்த மஸீஹ் ஆகிய இருவருக்கும் மத்தியிலுள்ள தோற்ற வேறுபாடுகளும் ஒன்றாகும். சஹீஹ் புகாரி பக்கம் 458, 867, 1055 ஆகிய பக்கங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள். இருப்பினும் இந்த ஹதீஸ் பாபு நுஸூலே ஈஸா மற்றும் கிதாபுல் அன்பியாவில் உள்ளது. இதில்

இரண்டு மஸீஹ் அதாவது பனீ இஸ்ராயீலின் மஸீஹ் மற்றும் முஹம்மதிய மஸீஹ் ஆகியோர்களின் தோற்றம் பற்றி கூறப்பட்டுள்ளது. இது வெவ்வேறாக உள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பற்றிய ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மஸீஹை காபத்துல்லாஹ்வில் வலம் வருவதாகக் கண்டார்கள். அவர் கோதுமை நிறமுடையவராக இருந்தார். அவரது முடி சுருட்டை முடி கிடையாது. அது நீள முடியாக இருந்தது. பிறகு இஸ்ராயீலைச் சேர்ந்த அசல் ஈஸா நபி பற்றி அவர் சிவப்பு நிறமுடையவராகவும் சுருட்டை முடியுடையவராகவும் இருந்தார் என்று எழுதப்பட்டுள்ளது. சஹீஹ் புகாரியில் வரக்கூடிய மஸீஹ் மவ்வூதின் தோற்றத்தில் அவர் கோதுமை நிறமும் நீள முடியும் உடையவர் என்று ஆங்காங்கே எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஈஸாவின் தோற்றத்தை சிவப்பு நிறமும் சுருட்டை முடியும் உடையவர் என்று ஆங்காங்கே எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து வரக்கூடிய மனிதர் வேறொரு நபர் என்றே கருதினார்கள் என்று விளங்குகிறது. மேலும் அவரது பண்பைப் பற்றி இமாமுக்கும் மின்கும் என்று பெயர் எழுதப்பட்டுள்ளது. மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வேறொரு நபர் என்று கூறப்பட்டுள்ளது. சில ஒற்றுமையின் காரணமாக ஈஸப்னு மர்யம் என்ற பெயரை இரண்டு பேருக்கும் சூட்டியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இன்னொன்றும் நினைவில் இருக்க வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரக்கூடிய ஈஸா நபி கோதுமை நிறமும் நீளமான முடியும் கொண்டவர் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, அவரைப் பற்றி கூறிய இடங்களிலெல்லாம் தஜ்ஜாலைப் பற்றியும் கூறுகின்றார்கள். ஆனால் பனீ இஸ்ராயீலின் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி கூறிய இடங்களில் தஜ்ஜாலைப் பற்றி கூறவில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பார்வையில் ஈஸப்னு மர்யம் இரண்டு பேர் ஆவர் என்று இதிலிருந்து நிரூபணமாகிறது. ஒருவர் கோதுமை நிறமும் நீளமான முடியும் கொண்டவர். இவருடன் தஜ்ஜால் இருக்கிறான். மற்றொருவர் சிவப்பு நிறமும் சுருட்டை முடியும் உடையவர். அவர் பனீ இஸ்ராயீலைச் சேர்ந்தவர் ஆவார். அவருடன் தஜ்ஜால் இல்லை. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இஸ்ரேலைச் சேர்ந்தவர் ஆவார். இஸ்ரேலைச் சேர்ந்தவரை கோதுமை நிறமுடையவர் என்று கூற முடியாது. ஆனால் இந்தியாவைச் சேர்ந்தவர்களைக் கோதுமை நிறமுடையவர் என்றே கூற வேண்டும். இந்த ஆதாரத்தின் மூலமும் நிரூபணமாவது யாதெனில் வரக்கூடிய கோதுமை நிறம் கொண்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹ் சிரியாவைச் சேர்ந்தவர் அல்ல. மாறாக, அவர் இந்தியாவைச் சேர்ந்தவர் ஆவார்.

இங்கு ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது ஹஸ்ரத் ஈஸா கோதுமை நிறமுடையவர் இல்லை. மாறாக அவர் பிற சிரியா நாட்டைச் சேர்ந்தவரைப் போன்று சிவப்பு நிறமுடையவராக இருந்தார்கள். ஆனால் வரக்கூடிய ஈஸாவின் நிறம் பற்றி ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது. அவரது தோற்றம் ஒருபோதும் சிரியாவைச் சேர்ந்தவர்களது தோற்றம் போன்று இருக்காது. இது ஹதீஸின் வார்த்தைகளிலிருந்து தெரிகிறது.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்தக் காலத்து மவ்லவிகள் நேர்மையிலும் மார்க்கத்திலும் நிலைத்து நின்றவாறு சிந்தித்தால் அவர்கள் இதை கண்டிப்பாக ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அதாவது 14ம் நூற்றாண்டின் முஜத்தித்தின் வேலை சிலுவையை முறிப்பதாகும். இது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பணியாகும். எனவே 14ம் நூற்றாண்டின் முஜத்தித் மஸீஹ் ஆக இருத்தல் வேண்டும். தீமைகளும், குழப்பங்களும் உதாரணத்திற்கு மது அருந்துதல் விபச்சாரம் போன்ற தீமைகள் மிகுதியாகப் பரவியுள்ளன.

14ம் நூற்றாண்டில் பல தீமைகளும் குழப்பங்களும் பரவி விட்டன. உதாரணத்திற்கு மது குடித்தல், விபச்சாரம் போன்ற தீமைகள், இன்னும் பல தீமைகள் பரவியுள்ளன. ஆனால் நன்கு சிந்தித்தால் தெரிந்து கொள்ளலாம். இவற்றிற்கு காரணம் ஒரு மனிதரின் இரத்தம் மனிதனை எல்லாப் பாவங்களிலிருந்தும் மன்னித்து விட்டது. அது கேள்வி கணக்கிற்கு பரிகாரமாகி விட்டது என்ற கொள்கையேயாகும்.

ஹஸ்ரத் ஈஸாவின் பரிகாரத்தின் காரணமாக பாவங்களுக்கு கேள்வி கணக்கு கிடையாது என்று நம்புகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இதன் காரணமாகவே இவ்வாறு குற்றம் புரிவதில் ஐரோப்பா எல்லா நாடுகளையும் விட மேலோங்கியுள்ளது. இதில் எல்லா மேற்கத்திய நாடுகளும் அடங்கும். பிற நாடுகளிலும் இப்போது எல்லா புறமும் பொய் பரவிக் கொண்டிருக்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இவ்வாறான மக்களுடன் சேர்ந்திருப்பதால் பொதுவாக எல்லா சமுதாயத்திலும் எந்த வரம்பும் இல்லாமல் சுதந்திரம் வளர்ந்து விட்டது.

இது ஐரோப்பாவில் மட்டுமல்லாது இவர்கள் எங்கெல்லாம் போகிறார்களோ அங்கும் இன்றைய நாட்களில் டி.வி. மூலமாக எல்லா பக்கமும் சுதந்திரமாக சென்று சேர்ந்து கொண்டிருக்கிறது. வெட்கக்கேடு வளர்ந்து கொண்டே இருக்கிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மக்கள் நோயினால் அழிந்து விட்டால், கொள்ளை நோய் அவர்களை தின்று விட்டால் இந்த எல்லா துன்பங்களும் அவர்களின் செயல்களின் விளைவே ஆகும் என்பது யாருடைய சிந்தனைக்கும் எட்டுவதே இல்லை. இதற்கு காரணம் என்ன? இறைவன் மீதுள்ள நேசம் குளிர்ந்து விட்டது. அந்த இறைவனின் கண்ணியம் கம்பீரம் ஆகியவற்றின் மீதுள்ள அச்சம் உள்ளத்திலிருந்து குறைந்து விட்டது. இதுவும் கவலைக்குரிய ஒன்றாகும். நாமும் துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஏற்றுக் கொள்ளாதவர்களும் சிந்திக்க வேண்டும்.

**ஹஸரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த பாவமன்னிப்புக் கொள்கைள் எல்லை மீறிய சுதந்திரம் ஐரோப்பிய சமுதாயத்தை மது குடிப்பதிலும் எல்லா தீமைகளிலும் தைரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அதே போன்று இவர்களின் நிலை பிற சமுதாயத்தையும் பாதித்தது. தீமைகள் கூட ஒரு பரவக்கூடிய நோய் தான் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்? ஒரு நேர்மையான பெண்மணி விபச்சாரிகளுடன் சேர்ந்திருந்தால் அவள் பகிரங்கமாக விபச்சாரம் செய்யா விட்டாலும் ஓரளவு தீய நட்பின் காரணமாக அவளுடைய உள்ளம் கண்டிப்பாக கெட்டுப் போய் விடும். ஏனென்றால் நட்பு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சூழ்நிலை தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சமூகம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்:**

சிலுவையின் இந்தக் கொடிய விசம் கொண்ட கொள்கை களிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று இறைவனின் கருணை நாடியது. ஒரு மனிதர் எந்த தஜ்ஜாலியத்தின் மூலம் இறைவனாக்கப்பட்டாரோ அந்த தஜ்ஜாலியத்தின் திரையை திறந்து விட வேண்டும் என்று விரும்பியது. 14வது நூற்றாண்டின் தொடக்கம் வரை இந்த பேரழிவு உச்சத்தை அடைந்து விட்டது. எனவே அல்லாஹ்வின் கருணையும் தயாளமும் 14ம் நூற்றாண்டின் முஜத்தித் சிலுவையை முறிப்பவராக இருக்க வேண்டும் என்று விரும்பியது. ஏனென்றால் முஜத்தித் மருத்துவர் ஆவார். மருத்துவர் என்பவர் எந்த நோய் உச்சத்தில் இருக்குமோ அதை முற்றிலும் அடியோடு அழிப்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். சிலுவையை முறிப்பது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வேலை தான் என்பது உண்மை என்றால் 14ம் நூற்றாண்டில் தோன்றும் முஜத்தித் அவருடைய கடமை சிலுவையை முறிப்பதாகும். அவரே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார் என்பதும் உண்மையாகும்.

**சிலுவையை முறிப்பது எவ்வாறு நிகழும் என்பது பற்றி அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த இடத்தில் இயல்பாக ஒரு கேள்வி எழுகிறது. மஸீஹ் மவ்வூது எப்படி? எதைக் கொண்டு சிலுவையை முறிப்பார்? என்ற கேள்வி, மஸீஹ் மவ்வூது போர் மற்றும் சண்டையின் மூலமாகவா சிலுவையை முறிக்க வேண்டும்? இன்றயை நமது எதிரி மவ்லவிகள் நம்பியிருப்பது போன்று முறிக்க வேண்டுமா? அல்லது வேறு ஏதாவது முறையிலா? இந்த கேள்வியின் பதிலாவது, மவ்லவிகளின் மீது இறைவன் கருணை காட்டுவானாக! அவர்கள் இந்தக் கொள்கையில் முற்றிலும் தவறில் மூழ்கியுள்ளனர். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் போர் மற்றும் சண்டையிடுவது அவரது நோக்கமல்ல. அவரது நோக்கம் அறிவுப்பூர்வமான சான்றுகள், வானத்தின் அடையாளங்கள் மற்றும் துஆ ஆகியவற்றின் மூலம் இந்த குழப்பத்தை அழிப்பார். இந்த மூன்று ஆயுதங்களையும் இறைவன் அவருக்கு வழங்கியுள்ளான். இம்மூன்றிலும் இறைவன் அற்புதமான சக்தியை வைத்துள்ளான். அதை அவரது எதிரிகள் ஒருபோதும் எதிர்க்க முடியாது. இறுதியில் இவ்வாறு சிலுவை முறிக்கப்படும். இறுதியில் ஒவ்வொரு சத்தியத்தின் பார்வையிலிருந்தும் சிலுவையின் கண்ணியம் மறைந்து விடும். இதன் மீது சிந்திப்பவர் இதை நன்கு ஆராய்ந்து பார்ப்பவர்களின் உள்ளத்திலிருந்து சிலுவையின் கண்ணியம் மற்றும் மகத்துவம் அழிந்து விடும். மெல்ல மெல்ல ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்ள மிகவும் பரந்த கதவு திறந்து விடும். இவ்வனைத்தும் படிப்படியாகவே நிகழும். ஏனென்றால் இறைவனின் எல்லா பணிகளும்

படிப்படியாகவே நிகழ்கின்றது. சில நமது வாழ்நாளிலும் இன்னும் சில நமக்குப் பிறகும் நிகழும். இஸ்லாம் தொடக்கத்தில் படிப்படியாகவே வளர்ந்தது. பிறகு அதன் கடைசி காலத்திலும் படிப்படியாக வளர்ந்து அது தனது முந்தைய நிலைக்குத் திரும்பும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ள மக்களும் இந்த கடமையை நிறைவேற்றுவதில் ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும்.

**பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் இருக்கட்டுமாக! காலத்தின் இமாம் என்ற சொல்லில் நபி, ரஸூல், முஹத்தஸ், முஜத்தித் ஆகிய அனைத்தும் உள்ளடங்கும். ஆனால் இறைவனின் படைப்புகளுக்கு நேர்வழி வழங்குவதற்காக அல்லாமலும் அதற்கான முழுமைத்தன்மை அவர்களுக்கு வழங்கப்படாமலும் இருப்பதால் அவர்கள் இறை நேசர்களாகவும் வலிமார்களாகவும் இருக்கலாம். ஆனால் அவர்கள் காலத்தின் இமாம் என்று அழைக்கப்படமாட்டார்கள். இறுதியில் இந்த கேள்வி எஞ்சியுள்ளது. இக்காலத்தின் இமாம் யார்? அவரைப் பின்பற்றுவது எல்லா பொதுவான முஸ்லிம்கள் மற்றும் இறையச்சம் உடையவர்கள், கனவு காணும் தகுதியைப் பெற்றவர்கள் மற்றும் இல்ஹாம் பெறக்கூடியவர்கள் ஆகிய அனைவரும் அந்த இமாமை பின்பற்றுவது இறைவன் புறமிருந்து கடமையாக்கப்பட்ட அந்த இமாம் யார்?

அதாவது எல்லா முஸ்லிம்களும், எல்லா நல்ல மனிதர்களும், கனவு காணும் தகுதியை அடைந்தவர்களும் மஸீஹ் தோன்றி விட்டார் என்ற செய்தியை இல்ஹாம்களின் மூலம் பெறக் கூடியவர்களும் ஆகிய அனைவரும் அந்த இமாமை பின்பற்ற வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனவே இறைவனின் அருளால் இப்போது காலத்தின் இமாம் நான் ஆவேன் என்று பகிரங்கமாக் கூறுகிறேன். என்னில் இறைவன் அனைத்து அடையாளங்களையும் எல்லா நிபந்தனைகளையும் ஒன்றுசேர்த்திருக்கிறான். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அவன் என்னை அனுப்பியுள்ளான். அதில் 15 வருடங்கள் கழிந்தும் விட்டன.

**இந்நூலை அவர்கள் எழுதும் போது அவர்கள் இதைக் கூறினார்கள்.**

இஸ்லாமிய கொள்கைகள் கருத்து வேறுபாடுகளால் நிறைந்த காலகட்டத்தில் நான் அனுப்பப்பட்டுள்ளேன். அவ்வாறே மஸீஹின் நுஸூல் பற்றியும் மிகவும் தவறான கருத்துகள் பரவி விட்டன. இந்தக் கொள்கையிலும் கூட கருத்து வேறுபாடு எந்த அளவுக்கு வளர்ந்து விட்டது என்றால், ஒருவர் மஸீஹ் உயிருடன் இருப்பதாக நம்புகிறார். ஒருவர் மரணம் அடைந்து விட்டதாக நம்பினார். ஒருவர் உடலளவில் இறங்குவார் என்று நம்பினார். ஒருவர் அவரது இறங்குதல் உவமை வடிவில் இருக்கும் என நம்புகிறார். ஒருவர் டமாஸ்கஸில் இறங்குவார் என்று நம்பிக் கொண்டிருந்தார். ஒருவர் மக்காவிலும் ஒருவர் பைத்துல் மக்தஸிலும் ஒருவர் இஸ்லாமிய படையின் மீதும் இறங்குவார் என்று நம்பி வந்தார். ஒருவர் இந்தியாவில் இறங்குவார் என்றும் நம்பி வந்தார். ஆக, இந்த அனைத்து வேறுபட்ட கருத்துக்களும் வேறுபட்ட கூற்றுகளும் தீர்ப்பு வழங்கும் ஒரு நீதிமானை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. எனவே அந்த நீதிபதி நான் ஆவேன். ஆன்மீக அடிப்படையில் சிலுவையை முறிப்பதாகவும் கருத்து வேறுபாடுகளைக் களையவும் அனுப்பப்பட்டுள்ளேன். இவ்விரண்டு அம்சங்களும் தான் நான் அனுப்பப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தன. என்னுடைய உண்மைத்துவத்திற்காக நான் இன்னும் ஆதாரங்கள் வழங்க வேண்டியது அவசியமில்லை. ஏனென்றால் காலத்தின் தேவையே என் வருகைக்கு ஆதாரமாகும்.

மஸீஹ் மவ்வூது தோன்ற வேண்டும் என்று காலம் எதிர்பார்த்திருந்தது. காலத்தின் தேவையாக இருந்தது. எனவே அதுவே அவரதுவருகைக்கு ஆதாரமாக அமைந்தது.

ஆனால் அவ்வாறெல்லாம் இருந்தும் எனக்கு ஆதரவாக இறைவன் பல அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான். நான் எவ்வாறு பிற வேறுபாடுகளில் தீர்ப்பு வழங்குவதற்கு ஹகமாக இருக்கிறேனோ அவ்வாறே (ஈஸா நபியின்) மரணம் மற்றும் உயிரோடு இருத்தல் ஆகிய கருத்து வேறுபாட்டிலும் தீர்ப்பு வழங்கும்.

ஹகமாக இருக்கிறேன். நான் இமாம் மாலிக், இப்னு ஹஸம் ஆகியவர்கள் மஸீஹைப் பற்றி கூறிய முஃதஸலா கூற்றை சரியானது என்று தெரிவிக்கிறேன். பிற அஹ்லே சுன்னத் மக்கள் தவறில் உள்ளார்கள் என்று நம்புகிறேன். ஆகவே நான் நீதியுடன் தீர்ப்பு வழங்குபவனாக இருப்பதால் சண்டையிடுபர்களுக்கு மத்தியில் எனது தீர்ப்பை நான் அறிவிக்கிறேன். நுஸூலின் அடிப்படை கருத்தில் அஹ்லே சுன்னத் பிரிவினர் சத்தியத்தில் உள்ளனர். ஏனென்றால் மஸீஹ் இறங்கி வர வேண்டியது கட்டாயமாகும். ஆனால் நுஸூலின் தன்மையைக் கூறுவதில் இவர்கள் தவறிழைத்துள்ளனர்.

அதாவது அவரது ஆன்மீக இறங்குதல் என்பது உண்மையாகும். ஆனால் அதன் தன்மையில் தவறிழைத்துள்ளனர். அந்த இறங்குதல் உவமை வடிவிலாகும். சொற்பொருளின்படி அல்ல. மஸீஹின் வஃபாத் தொடர்பான விவகாரத்தில் முஃதஸிலா, இமாம் மாலிக் மற்றும் இப்னு ஹஸம் போன்றோர் உண்மையாளவர்களாவர். திருக்குர்ஆனின், ***நீ என்னை மரணிக்கச் செய்த பின்னர் (5:118)*** என்ற வசனத்தின்படி கிறிஸ்தவர்கள் வழிதவறுவதற்கு முன் மஸீஹ் மரணமடைவது கட்டாயமாகும் என்பது தெரிகிறது. இது என் சார்பாக நான் நீதியுடன் தீர்ப்பு வழங்குபவனாக இருப்பதால் எனது தீர்ப்பாகும். எவர் எனது தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர் என்னை நீதியுடன் தீர்ப்பு வழங்குபவனாக நியமித்த அந்த இறைவனை ஏற்றுக் கொள்ளவில்லை. நீர் தான் அந்த ஹகம் என்பதற்கு என்ன ஆதாரம்? என்று கேட்டால் அதற்கு இதுவே பதிலாகும். அதாவது எந்த காலகட்டத்திற்காக ஹகம் தோன்ற வேண்டுமோ அந்த காலகட்டம் இப்போது உள்ளது. எந்த சமுதாயத்தின் சிலுவை தவறுகளை அந்த ஹகம் வந்து சீர்திருத்த வேண்டியிருந்ததோ அந்த சமுதாயமும் இப்போது இருக்கிறது. எந்த அடையாளங்கள் அந்த ஹகம் -ற்கு சாட்சி கூற வேண்டுமோ அந்த அடையாளங்களும் வெளிப்பட்டு விட்டன. வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் இப்போது அடையாளங்களின் தொடர் ஆரம்பமாகி உள்ளது. வானம் அடையாளத்தை வெளிப்படுத்துகிறது. பூமி அடையாளத்தை வெளிப்படுத்துகிறது. கண்களை மூடிக் கொள்ளாதவர்கள் அருளுக்குரியவர் ஆவர்.

அல்லாஹ் முஸ்லிம் உம்மத்தின் கண்களைத் திறப்பானாக! ஹகமை ஏற்றுக் கொள்பவர்கள் ஆவார்களாக!

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: எனது எதிரிகள் தமது உள்ளத்தால் தாமே சிந்தித்துப் பாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஒரு கை என்று கூறிய அந்த வாக்களிக்கப்பட்ட நபர் நான் என்றால், நபி (ஸல்) ஸலாம் அனுப்பிய அந்த நபர் நான் என்றால், அவருக்கு ஹகம், அத்ல், இமாம், கலீஃபத்துல்லாஹ் என்று பெயர் வைத்துள்ளார்கள் என்றால், இப்படிப்பட்ட நபருடன் இவ்வாறு நடந்து கொள்வது சரியா?

அவர்கள் கூறுகின்றார்கள்: இப்படிப்பட்ட நபர் மீது லஃனத் செய்வது, அவரை ஏசிப் பேசுவது சரியா? உயர்ந்த மன்னனோ அல்லது வேறு யாரோ, கொஞ்சம் உங்களது உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி சிந்தித்துப் பாருங்கள். எனக்காக வேண்டாம். மாறாக அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்காக சிந்தியுங்கள். இவ்வாறு வாதம் புரிந்தவருடன் இவ்வாறு நடந்து கொள்வது சரியா?

நான் மிக அதிகமாக பேச விரும்பவில்லை. உங்களுடனுள்ள எனது வழக்கு வானத்தில் உள்ளது. ரஸூல் (ஸல்) அவர்களின் தூய உதடுகள் செய்த அதே வாக்குறுதி எனக்காகத்தான் என்றால் நீங்கள் எனக்கு அல்ல. இறைவனுக்கு பாவம் செய்துள்ளீர்கள். அவருக்கு துன்பம் இழைக்கப்படும். அவர் மீது லஃனத் செய்யப்படும் என்று முந்தைய வேத நூல்களில் கூறப்பட்டிருக்கா விட்டால் நீங்கள் என்னை துன்புறுத்தியது போன்று துன்புறுத்த ஒருபோதும் உங்களுக்கு தைரியம் இருந்திருக்காது.

மஸீஹிற்கு துன்பம் இழைக்கப்படும் என்பது ஏற்கனவே விதிக்கப்பட்ட ஒன்றாகும். முந்தைய வேதங்களில் அது எழுதப்பட்டுள்ளது. இறைவனின் சார்பாக எழுதப்பட்ட அந்த இறை வேதங்களின் முன்னறிவிப்புகள் நிறைவேற வேண்டும் என்பது விதிக்கப்பட்டதாகும். இப்போது வரை உங்களை குற்றப்படுத்துவதற்காக உங்களது நூல்களில் அவை உள்ளன. அதை நீங்கள் உங்கள் நாவால் வாசிக்கிறீர்கள். இருந்தும் நிராகரித்து லஃனத் செய்து, அச்சு பதித்து விடுகிறீர்கள். அந்த தீய ஆலிம்களும் அவர்களது நண்பர்களும் மஹ்தியை நிராகரிப்பார்கள், மஸீஹை எதிர்ப்பார்கள் என்று எழுதப்பட்டிருப்பவர்கள் நீங்களே ஆவீர்கள்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: இதையும் சிந்தித்துப் பாருங்கள். நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதம் புரிந்துள்ள நபர் ஆவேன். என்னைப் பற்றி ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர் உங்களது

இமாமும் கலீஃபாவும் ஆவார் என்றும், அவர் மீது இறைவன் மற்றும் அவனது நபியின் ஸலாம் உள்ளது. அவரது பகைவன் சாபத்திற்குரியவனும் அவரது நண்பன் இறைவனின் நண்பனும் ஆவான். அவர் முழு உலகிற்கும் நீதியுடன் தீர்ப்பு வழங்குபவராக வருவார். அவர் தமது எல்லா கூற்றிலும் செயலிலும் நீதிமான் ஆக இருப்பார் என்று கூறினார்கள். எனது வாதத்தைக் கேட்டு, எனது அடையாளங்களைப் பார்த்து, எனது ஆதாரங்களைப் பார்த்து விட்டு என்னை அசிங்கமாகப் பேசுகிறீர்கள். ஏளனம் செய்கிறீர்கள். பரிகாசத்துடன் நடந்து கொள்கிறீர்கள். அடையாளம் வெளிப்பட வில்லையா? இவ்வனைத்து காலகட்டமும் நேரமும் தெரியவில்லையா? ஹதீஸிலும் முந்தைய வேதங்களிலும் கூறப்பட்டவை தெரியவில்லையா? பிறகு ஏன் இந்த அளவுக்கு அவமரியாதையுடன் நடந்து கொள்ளப்படுகிறது? எனது வாதத்தில் இப்போதும் சந்தேகம் இருக்கும் என்றால் அல்லது எனது ஆதாரங்களிலும் அடையாளங்களிலும் இன்னும் ஐயம் இருக்கும் என்றால் பணிவுடனும் நல்ல எண்ணத்துடனும் இறைவன் புறமிருந்து இந்த சந்தேகங்களைப் போக்கியிருக்கலாம். உங்களது சந்தேகங்களை என்னிடம் வந்து போக்கிக் கொள்ளலாம் என்று நான் மீண்டும் மீண்டும் அழைத்தேன். ஆனால் யாரும் வரவில்லை. நான் தீர்ப்பிற்காக ஒவ்வொருவரையும் அழைத்தேன். ஆனால் யாரும் இதன் பால் கவனம் செலுத்தவில்லை. நீங்கள் இஸ்திகாரா செய்யுங்கள். அழுதழுது இறைவனிடம் வேண்டுங்கள். அவன் உங்கள் மீது சத்தியத்தை வெளிப்படுத்துவானாக என்று கூறினேன். ஆனால் நீங்கள் எதுவும் செய்யவில்லை. நிராகரிப்பதையும் விடவில்லை. இறைவன் என்னைப் பற்றி மிகச் சரியாக சொன்னான்.

**உலகில் ஓர் எச்சரிப்பாளர் வந்தார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மிகவும் வலுவான தாக்குதல்களால் அவருடைய உண்மையை வெளிப்படுத்துவான்.**

ஒரு மனிதன் உண்மையில் அவர் சத்தியவானாக இருந்தும் அவர் வீணாக்கப்படுவாரா? இறைவன் புறமிருந்து வந்த ஒருவர் அழிந்து போவாரா? மக்களே! நீங்கள் இறைவனுடன் சண்டையிடாதீர்கள். இது இறைவன் உங்களுக்காகவும் உங்களின் ஈமானுக்காகவும் செய்ய விரும்புகின்ற பணியாகும். நீங்கள் மின்னலுக்கு முன்னால் வேண்டுமானால் நிற்கலாம். ஆனால் இறைவனுக்கு முன்னால் உங்களுக்கு ஒருபோதும் சக்தியில்லை. இந்த வியாபாரம் மனிதன் புறமிருந்து செய்யப்பட்டது என்றால், உங்களது எதிர்ப்புக்கு கொஞ்சமும் அவசியம் கிடையாது. இறைவன் இதை அழிப்பதற்கு அவனே போதுமானவன் ஆவான். வானம் சாட்சி பகர்கிறது. ஆனால் அந்தோ! நீங்கள் கேட்பதில்லை. பூமி தேவை, தேவை என்கிறது. ஆனால் அதை பார்ப்பதில்லையே! ஏய்! துரதிஷ்டசாலி சமுதாயமே! எழுந்திரு! பார். இஸ்லாம் கால்களுக்குக் கீழே நசுக்கப்பட்டது. குற்றவாளிகளைப் போன்று அவமானப்படுத்தப்பட்டது. அது பொய்யர்களுடன் சேர்க்கப்பட்டது. அது அசுத்தமானவற்றுடன் சேர்த்து எழுதப்பட்டது. இறைவனுடைய ரோசம் அந்த சமயத்தில் பொங்கி எழாதா? இப்போது வானம் குனிந்து வருகிறது. இப்போது ஒவ்வொரு காதுக்கும் ''நான் இருக்கிறேன்'' என்ற சப்தம் வரும் நேரம் இதுவாகும்.

அல்லாஹ் முஸ்லிம்களின் காதுகளைத் திறப்பானாக! அவர்கள் யாவரும் இந்த ஓசையை கேட்பவர்களாக விளங்குவார்களாக!

இப்போது நான் ஒரு கவலைக்குரிய செய்தியை கூற விரும்புகிறேன். இது ஒரு வஃபாத் செய்தியாகும். சவுத்ரி முபாரக் முஸ்லிஹ் தீன் அஹ்மது சாஹிபின் வஃபாத் சம்பவமாகும். இவர் தஹ்ரீகே ஜதீதில் வகீலுத் தஃலீம் ஆக இருந்தார்கள். இவர் ஜமாஅத்தின் மிக நீண்டகால தொண்டர் ஆவார். மார்ச் 16 ஆம் தேதியன்று இவர் வஃபாத் ஆகியுள்ளார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் ஜுன் 21, 1934 ஆம் ஆண்டு பிறந்தார். மதிப்பிற்குரிய சூஃபி குலாம் அஹ்மது சாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபிக்கு பிறந்தார்கள். இவரது தாத்தாவும் சஹாபி ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் 313 சஹாபிகளில் இவரது தாத்தாவும் ஒருவராவார். ஜுன் 5, 1895 -ல் இவர் பைஅத் செய்தார். இந்தியா பிரிவினைக்குப் பின் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கட்டளைக்கேற்ப இவர் காதியான் சென்று அங்கு தர்வேஷ்களில் ஒருவராக சேர்ந்து விட்டார்கள். இவர் காதியானில் வஃபாத் ஆகி அங்கேயே பெஹஸ்தி மக்பராவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மதிப்பிற்குரிய சவுத்ரி முபாரக் முஸ்லிஹ் தீன் சாஹிபின் தந்தை சூஃபி குலாம் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்கும் நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. மதிப்பிற்குரிய சூஃபி சாஹிப் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்ற அடிப்படையில் ஜமாஅத்தின் பல்வேறு தொண்டுகளைச் செய்யும் நல்வாய்ப்பு கிடைத்தது. தஃலீமுல் இஸ்லாம் மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியராகவும் இவர் இருந்தார். Boarding -ன் Superintendent ஆகவும் இருந்தார். தஹ்ரீகே ஜதீதின் நாஸிர் பைத்துல் மால்

கர்ச் ஆகவும், சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் நாஸிர் ஆலா ஸானியாகவும் இருந்தார். இவ்வாறு பல்வேறு தொண்டுகளைச் செய்யும் நல்வாய்ப்பும் இவருக்கு கிடைத்தது.

முஸ்லிஹுத்தீன் சாஹிபின் தாத்தா குஜராத்தைச் சேர்ந்தவர். ஜூன் 18, 1949 ஆம் ஆண்டு இவர் தன் வாழ்வை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்தார். முன்னதாக இவரது பெற்றோர்கள் இவரை வக்ஃப் செய்திருந்தனர். செப்டம்பர் 19, 1949 அன்று மெட்ரிக் முடித்த பிறகு வக்ஃப் செய்த 8 மாணவர்களை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அழைத்தார்கள். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே மாணவர்களின் தேர்வுக்கான வினாக்களை தயார் செய்தார்கள். தேர்வு நடத்தினார்கள். நேர்முகத் தேர்வும் நடத்தினார்கள். அவர்களில் முபாரக் முஸ்லிஹுத்தீன் சாஹிபும் ஒருவர் ஆவார். பிறகு சிலரை கல்லூரியில் மேல்படிப்பு படிக்கும்படி கூறினார்கள். தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளியில் இவர் 9 ஆம் வகுப்பு வரை படித்தார். பிறகு மெட்ரிக் முதல் டிவிஸனில் தேர்ச்சி பெற்றார். பிறகு 1953-ல் லாஹூரில் உள்ள தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் பி.எஸ்ஸி. முடித்த பிறகு லாஹூரின் அரசுக் கல்லூரியில் 1956 -ல் பஞ்சாப் யுனிவர்சிட்டியின் மூலம் கணிதத்தில் எம்.எஸ்ஸி. முடித்தார். பிறகு இவர் வக்ஃப் ஆனதால் 1956 -ல் இவர் ஜமாஅத் பணிகளுக்காக வந்து ஆஜரானார். இவர் முதன் முறையாக அமானத் தஹ்ரீகே ஜதீதில் பணி அமர்த்தப்பட்டார். சில மாதங்கள் அங்கு வேலை பார்த்து வந்தார். பிறகு வகாலத்தே மாலில் நியமிக்கப்பட்டார். பிறகு ஜமாஅத்தின் ஒரு வியாபார நிறுவனமான Asia American-ல் பணி அமர்த்தப்பட்டார். சில வருடங்கள் அங்கு பணியாற்றினார். 1964 -ன் தொடக்கத்தில் அவர் மீண்டும் தஹ்ரீகே ஜதீதுக்கு வந்தார். வகாலத்தே மால் ஸானி -ல் நாயிப் வகீலுல் மால் ஸானி ஆக 1972 வரை இருந்தார். 1972 முதல் 2001 வரை வகீலுல் மால் ஆக பணியாற்றினார்.

அதன் பிறகு 2001 முதல் வஃபாத் வரைக்கும் வகீலுத் தஃலீமாக இருந்தார். இது தவிர ஜமாஅத்தின் பல்வேறு கமிட்டிகள் மற்றும் போர்டுகளுக்கு இவர் உறுப்பினராக இருந்தார். மஜ்லிஸ் கார்பர்தாஸ் பெஹஷ்தி மக்பராவின் உறுப்பினராகவும் இருந்தார். மிகவும் நல்ல ஆலோசனை கூறும் திறன் கொண்டவர். அல்லாஹ்வின் அருளால் நன்றாக சிந்தித்து ஆலோசனை தருபவர். அதிகமான அறிவு கொண்டவர். இவர் எந்த கமிட்டிக்கு மெம்பராக இருந்தாலும் அந்த கமிட்டியின் கூட்டங்களில் முறைப்படி கலந்து கொள்வார். நன்றாக ஆராய்ந்து அறிவைப் பெற்று பிறகு கூட்டங்களுக்கு வரக்கூடியவர். கிலாஃபத்துடன் மிகவும் எல்லையற்ற பற்றும் விசுவாசமும் கொண்டவர். திருக்குர்ஆனில் பல பகுதிகள் அவருக்கு மனனமாக இருந்தது. நன்றாக திருக்குர்ஆன் ஓதக் கூடியவர். பெரும்பாலும் ஷூராவில் இவர் திலாவத் ஓதி வந்தார். இவருக்கு இந்த வாய்ப்பை இறைவன் வழங்கினான். 57 வருடங்கள் ஜமாஅத்திற்கு தொண்டு செய்துள்ளார்.

கிளை அமைப்புகளிலும் குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் இவர் மிக நீண்ட காலம் வேலை செய்துள்ளார். 1964 -ல் இவருக்கு திருமணம் நடந்தது. இவரது மனைவி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபியின் பேத்தி ஆவார். இவர் காராவைச் சேர்ந்தவர். இவரது தந்தையின் பெயர் குலாம் ரஸூல் ஆகும். இவருக்க 3 மகன்களும் 2 மகள்களும் உள்ளனர். இவரது மனைவி கூறுகிறார்: வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் அல்லது வேலை செய்பவர்கள் ஜமாஅத்திற்கு எதிராக ஏதாவது கூறினால் அவர் மிகவும் கண்டிப்புடன் தடுத்து விடுவார். ஜமாஅத்திற்கு எதிராக பேசுவதை ஒருபோதும் இவர் பொறுத்துக் கொள்ளமாட்டார்.

இவரது மனைவி பாகிஸ்தானின் லஜ்னாவின் நாயிப் சதர் ஆவார். இவர் கூறுகிறார்: நான் லஜ்னாவின் பணிகளுக்காக சுற்றுப்பயணம் செல்லும் போது ஒருபோதும் என்னை அவர் தடுத்ததில்லை. ஜமாஅத் பணிகளுக்கு எப்போதும் முக்கியத்துவம் கொடுத்து வந்தார். சில நேரம் மனைவியை லஜ்னாவின் வேலைகளைப் பார்க்கச் சொல்லி விட்டு இவர் உணவு சமைக்க வேண்டியது வந்தாலும் தாமே சமைத்துக் கொள்வார்.

கொஞ்ச வருடம் முன் நான் இவரை பங்களாதேஷ் சுற்றுப் பயணத்திற்காக அனுப்பினேன். அங்கு இவருக்கு கடுமையான இருதய நோய் ஏற்பட்டது. இவருக்கு 30 வருடங்கள் முன்பிருந்தே இந்த நோய் இருந்து வந்தது. கோளாறு ஏற்பட்டு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அப்போது இவரது மகன் போன் செய்து நான் வரட்டுமா? கனடாவிலிருந்து பங்களாதேஷ் வருவது மிகவும் எளிதானது. எனவே நான் வருகிறேன் என்று கூறினார். அதற்கு அவர் வேண்டாம். காலத்தின் கலீஃபா இங்குள்ளவர்களுக்கு என்னை கவனிக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். எனவே இங்குள்ளவர்கள் என்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறார்கள். வர வேண்டாம் என்று கூறி விட்டார். ஏதாவது சின்ன விசயமாக இருந்தாலும் சரி அதை கலீஃபாவிடம் கேட்டு தான் செய்வார்கள். இவருடைய மகன் ஹாஃபிஸ் நாஸிருத்தீன் திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்தவராவார்.

இவர் எழுதுகிறார்: என் தந்தையிடம் பல மக்களுடைய அமானிதம் இருந்தது. மக்களுடைய அமானத்துகள் சந்தா தொகை, ரசீதுகள் மற்றும் வஸிய்யத்துகளின் கணக்கும் இவரிடம் இருந்தது. அவற்றை அவர் உரியவருக்கு சரியாகத் திருப்பிக் கொடுத்து வந்தார்கள்.

இவருடைய மகன் மஜ்துத்தீன் சாஹிப் கூறுகிறார்: இவருடைய வீட்டில் ஏதாவது விவகாரத்தைக் குறித்து பேசிக் கொண்டிருப்போம். அப்போது கொஞ்ச நேரம் கழித்து இவர் வந்து நான் துஆவுக்காகவும் ஆலோசனைக்காகவும் காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதி விட்டேன் என்பார். எல்லா விசயத்தையும் ஆலோசனை கேட்டு தான் செய்வார். அது வீட்டுப் பிரச்சனையாக இருந்தாலும் சரி. அவர் கூறுவார்: **வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஒருபோதும் யாரிடமும் எதையும் கேட்டுப் பெறக் கூடாது** என்பார். வக்ஃபே ஸிந்தகி படிவத்தில் இப்போது பல விசயங்கள் சேர்க்கப்பட்டு விட்டன. அவர் கூறுவார்: எங்களது காலத்தில் வக்ஃபே ஸிந்தகி ஆவதற்கு ஒரேயொரு நிபந்தனை மட்டுமே இருக்கும். அதாவது கேட்டுப் பெறக் கூடாது என்பது மட்டும் நிபந்தனையாக இருந்தது.

இவருடைய பிள்ளைகள் கூறுகின்றனர்: வக்ஃபே ஸிந்தகியாக இருந்த காரணத்தால் வாழ்வில் ஏதாவது குறையுள்ளது என்று எந்த விதமான உணர்வும் எங்களுக்கு ஏற்பட்டதே இல்லை. எங்களது எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றி வந்தார்கள். முஸ்லிஹ்தீன் சாஹிபின் தந்தையும் வக்ஃபே ஸிந்தகி ஆவார்கள். இவர் 7 சகோதரிகளுக்கு ஒரே சகோதரராக இருந்தார். வீட்டில் ஒரே மகன் ஆவார். அவரை பெற்றோர்கள் வக்ஃப் செய்தனர். ஒருபோதும் எந்தவித விசயத்தையும் கேட்டு குறை கூறியதில்லை. முஸ்லிஹ்தீன் சாஹிபின் தந்தை சூஃபி குலாம் அஹ்மது சாஹிப் பள்ளிக்கூடத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹிற்கு கடிதம் எழுதினார்கள். நான் வக்ஃபே ஸிந்தகி ஆவேன். இப்போது எனக்கு ஓய்வு கிடைத்து விட்டது. இனி நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள். மிக நீண்ட காலமாக பதில் வரவில்லை. முஸ்லிஹ்தீன் சாஹிப் விடுதியில் தங்கி வந்தார்கள். அங்கு வஸிஃபா கிடைத்து வந்தது. தந்தையின் நிலை கஷ்டமாக இருக்குமே என்று விடுதியை விட்டு வந்து அந்த உதவித்தொகையை வீட்டுச் செலவுக்காக செலவு செய்து வந்தார்கள். மிகவும் கஷ்டத்துடன் அங்கு அவர்கள் காலம் கழித்து வந்தார்கள். பிறகு அல்லாஹ் இவர் மீது கருணை புரிந்தான்.

இவர் ஒரு சம்பவத்தை எழுதுகிறார்: ஒருமுறை இஸ்லாமாபாத் சென்றேன். ஏதோ ஜமாஅத் வேலைக்காகச் சென்றேன். அங்கு எனது நண்பர் இருந்தார். வெகு காலமாக அவரை சந்திக்கவே இல்லை. அப்போது நான் அவரிடம் சென்றேன். அவர் கூறினார். நீங்கள் வகீலுல் மால் ஆக இருக்கிறீர்கள். ஜமாஅத்தின் நிலை இப்போது மிகவும் செழிப்பாக இருக்கிறது. என்ன சம்பளம் கிடைக்கிறது? என்று கேட்டார். அவர் கேட்டதற்கான நோக்கம் சம்பளம் அதிகமாக இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் கேட்டதாகும். அப்போது நான் கூறினேன். எனக்கு கிடைப்பதில் அதிக பரக்கத் கிடைக்கிறது. நீ அரசு வேலை செய்கிறாய். Secretariat ஆவீர். உமக்கு கிடைக்காத அளவு அதிகமான பரக்கத் எனக்கு கிடைக்கிறது என்றேன். இவ்வாறு பேசி விட்டு இரவில் நாங்கள் தூங்கி விட்டோம். காலையில் எழுந்து Secretariat –ல் ஏதோ ஜமாஅத் பணிக்காகச் செல்ல வேண்டியதிருந்தது. சென்று கொண்டிருக்கும் போது நண்பர் சாலையில் நின்று டாக்ஸி வாடகைக்கு எடுத்துக் கொண்டு போகலாம் என்றார். அதற்கு இவர் டாக்ஸிக்காக காத்திருக்கும் நேரத்தில் நாம் நடக்கலாம் என்றார். சாலையில் ஒரு பெரிய கார் வந்து நின்றது. அது ஒரு Fly Car ஆகும். அந்தக் காரில் இருந்தவர் இவருடைய நண்பர் அலுவலகத்தில் வேலை பார்த்தும் இவரிடம் எதுவும் கேட்கவில்லை. ஆனால் இவரிடம் நீங்கள் இன்ன இடத்திலிருந்து Secretariat செல்ல வேண்டுமா? என்று கேட்டார். இவர் ஆம் என்றார். அதற்கு அந்த நபர் எனக்கு எதேச்சையாக உள்ளத்தில் தோன்றியது. நீங்களும் அங்கு செல்லக் கூடியவர் தான். உங்களையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று தோன்றியது என்று கூறினார். ஆக உள்ளே சென்றோம். Fly Car ஆக இருந்தது. எனவே Gate –ம் திறந்தது. யாரும் எதுவும் கேட்கவில்லை. இவர் தம் நண்பரிடம் பாருங்கள். நீங்கள் இப்போது டாக்ஸி எடுத்திருந்தால் 15–16 ரூபாய் செலவாகியிருக்கும். ஆனால் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுடன் அல்லாஹ் இவ்வாறு நடந்து கொள்கிறான். ஒரு Fly Car வந்து நின்றது. அவரை எனக்குத் தெரியாது. அவருக்கும் நான் யார் என்று கூட தெரியாது. என்னைத்தான் வாருங்கள் என்றார். உம்மை அவர் கேட்கவில்லை. என் காரணமாக அலுவலகத்திற்கு வந்து விட்டீர்கள். Gate –ல் பெயர் எழுத வேண்டும். அல்லது அறிமுகம் பெற வேண்டும். அதுவும் இல்லை. நாம் நேரடியாக உள்ளே வந்துவிட்டோம். இதுவே அல்லாஹ் வக்ஃபே ஸிந்தகியுடன் நடந்து கொள்ளும் விதமாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு குத்பாவில் நற்செய்தி அடங்கிய தமது ஒரு கனவைக் குறிப்பிட்டார்கள். அதில் இவ்வாறு கண்டதாகக் கூறினார்கள். அதாவது சுற்றுலா பேருந்து போன்ற ஒரு பஸ்ஸில் நானும் சில நண்பர்ளும் பயணம் செய்கிறோம். ஒரு ஆற்றை கடக்க வேண்டியதிருந்தது. பஸ்ஸின் பயண நிலை எவ்வாறிருந்தது என்று எனக்கு நினைவில் இல்லை. ஆனால் ஒரு பாலத்திற்கு அடியில் வந்து அந்த பஸ் நின்று விட்டது. அந்த பஸ் அதற்கு அடுத்து ஏதோ காரணத்தால் செல்ல முடியாது. அப்படிப்பட்ட நேரத்தில் பயணிகள் கீழிறங்கி உலாவ ஆரம்பிப்பார்கள். அதே போன்று நானும் பஸ்ஸிலிருந்து கீழிறங்கினேன். சில பயணிகளும் இறங்குகிறார்கள். எனக்கு வேறு யாரும் நினைவில் இல்லை. ஆனால் முபாரக் முஸ்லிஹ்தீன் சாஹிப் நமது வக்ஃபே ஸிந்தகி தஹ்ரீகே ஜதீதில் பணிபுரிபவர்கள் என்னுடன் இருப்பது நன்றாக நினைவில் இருக்கிறது. வேறு ஏதும் முக்கிய பணிகள் இல்லை என்றால் சரி, இப்போது குளிக்கலாம் என்று கூறுவது போல் நானும் அவரும் ஆற்றில் குதிக்கிறோம். அப்போது எனக்கு இவ்வாறு சிந்தனை தோன்றுகிறது. அதாவது சற்று நீந்தி விட்டு திரும்பி வந்து விடலாம். ஆனால் முபாரக் முஸ்லிஹ்தீன் என்னை விட இரண்டு கை அளவு முன்னால் இருக்கிறார். வாருங்கள்! நாம் இப்படியே நீந்தி ஆற்றைக் கடக்கலாம் என்கிறார். எனக்கு இவ்வாறு சிந்தனை தோன்றியது. ஆறு மிகவும் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. சிந்து நதியில் வெள்ளம் வரும் போது இருப்பது போல் நதி வேகமாக பாய்கிறது. நம்மால் இது முடியுமா? முடியாதா? என்று தோன்றுகிறது. முபாரக் முஸ்லிஹ்தீன் கூறுகிறார். இல்லை. நாம் சென்று விடுவோம்; போகலாம் என்கிறார். அப்போது எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது. நான் ஒன்றும் மிகச் சிறந்த நீச்சல்காரன் இல்லை. ஆனால் நீச்சலில் மிகவும் அசாத்தியமான சக்தி பிறக்கிறது. சில கைகளை அடித்ததும் பெரிய தூரத்தை கடந்து விடுகிறோம். அப்போது திரும்பிப் பார்த்தால் பின்னால் இருந்த நதிக்கரை மிகவும் தூரத்தில் தென்படுகிறது. பிறகு இன்னும் கொஞ்சம் நீந்தியதும் ஆறு முழுவதையும் கடந்து வந்து விடுகிறோம். மறுபக்கம் நாங்கள் கரை ஏறுகிறோம். ஆச்சரியம் என்னவென்றால் முபாரக் முஸ்லிஹ்தீன் கனவில் எனக்கு முன்னால் தென்படுகிறார். ஆனால் கரை ஏறும் போது முதலில் நான் கரைக்கு வருகிறேன். அதன் பிறகு அவர் வருகிறார். இவ்வாறு நாங்கள் இருவரும் மறு கரைக்குச் சென்று இங்கிருந்து வெளியேறி மறு முனையிலிருந்து உலகில் எவ்வாறு வளர்ச்சி பெறுவது என்று பார்வையிடுகிறோம்.

பிறகு அவர்கள் எழுதுகிறார்கள்: பொதுவாக இந்த சிந்தனை மனிதனுக்கு தோன்றுவதில்லை. எனவே இந்தக் கனவு முடிந்த பின் எனது உள்ளத்தில் மிகவும் பலமான தாக்கம் இருந்தது. இது இறைவன் புறமிருந்து தெளிவான ஒரு தூதுச் செய்தியாகும். ஏதோவொரு புதிய இலக்கை அடைவது தொடர்பாக நற்செய்தி வழங்குகின்றான். இதன் ஒரு பகுதி இப்போது வரை எனக்கு புரியவில்லை. எனக்குப் பின்னால் எனது நண்பர்கள் ஏன் விடுபட்டனர்? நாங்கள் இருவர் மட்டும் ஏன் முன்னால் சென்று விட்டோம்? என்று புரியவில்லை. எவ்வாறிருப்பினும் உள்ளத்தில் இந்தத் தாக்கம் கண்டிப்பாக இருக்கிறது. இந்தக் கனவில் அச்சமூட்டும் எச்சரிக்கை ஏதுமில்லை. மாறாக நற்செய்தி இருந்தது. ஆற்று வெள்ளம் பஸ்ஸை நிறுத்தி விட்டது. ஆனால் எங்கள் இருவரையும் அதனால் தடுக்க முடியவில்லை. இருந்தாலும் இது ஒரு அருளுக்குரிய கனவாகும். இதில் அவருடைய பெயரின் அடிப்படையிலும் முபாரக்கான கனவாகும். இதில் ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் கூறப்பட்டுள்ளது.

இவர் துஆ செய்யும் பழக்கம் உடையவர். தஹஜ்ஜுத் தொழுபவர் ஆவார். பிறரை அதிகமாக கவனிக்கக் கூடியவர். இவருடைய அலுவலகத்தில் பணிபுரிபவர் எழுதுகிறார்:

இவர் ஒவ்வொரு வருடமும் ஏழைகளுக்கு ரமலானில் வீட்டுக்குத் தேவையான ரேசன் பொருட்களை வாங்கிக் கொடுப்பார். இது வேறு யாருக்கும் தெரியாது. இவர் அலுவலகப் பணிகளில் மிகவும் கண்டிப்பானவர். ஆனால் இயல்பில் அவர் மென்மையானவரும், பணிவான மனிதரும் ஆவார். இவருடைய பிள்ளைகள் இப்போது இறைவனின் அருளால் பொருள் வசதியுடையவர்களாக உள்ளனர். இவருடைய நன்மைகளையும் படைப்பின சேவையைத் தொடர்ந்து செய்யக் கூடியவர்களாகவும் இருப்பார்களாக!

இவர் தமது ஒரு மகளை டாக்டர் படிக்க வைக்க வேண்டும் என்று விரும்பினார். அப்போது இவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்திக்கச் சென்ற போது அவர்கள், பெண்கள் டாக்டர் ஆனால் வீட்டு வேலையில் சிரமம் ஏற்படுகிறது என்று மட்டுமே கூறினார்கள். இதனால் இவர் அந்த எண்ணத்தை கை விட்டு விட்டார். ஆனால் அல்லாஹ் அந்தப் பெண்ணுக்கு அதிகமாக அருள் செய்தான். அவர் கனடா சென்று Ph.d படித்து டாக்டர் ஆவதற்கு நல்வாய்ப்பை வழங்கினான். சில விசயங்கள் மிகவும் சின்னதாக தெரியும். இங்கும் பாருங்கள். குழந்தைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து கல்வி உதவித் தொகை கிடைத்தால் கணவன் நான் வாங்குவேன் என்பார். மனைவி இல்லை நான் வாங்குவேன் என்பார். இவ்வாறு சண்டை ஏற்படும்.

ஆனால் இவருடைய மகன் எழுதுகிறார்: நான் நல்ல மதிப்பெண் பெற்றதால் எனக்கு ஸ்காலர்சிப் கிடைத்தது. எனது தந்தை என்னிடம் இந்த ஸ்காலர்சிப் உனது உழைப்பின் மூலம் கிடைத்ததாகும். ஆனால் உனது படிப்பிற்கான செலவு மற்றும் தங்குவதற்கான செலவு ஆகியவற்றை நான் செய்து வருவேன். உனக்கு கிடைக்கும் இந்த பணம் உன்னுடையது. அதில் வீட்டில் யாருக்கும் உரிமை கிடையாது என்று கூறினார். ஆனால் இது எங்களது உரிமையாகும் என்று குழந்தைகள் கேட்டு விட வேண்டும் என்பது இதற்கு பொருள் அல்ல. கூற வந்த நோக்கம் என்னவென்றால், எந்த நோக்கத்திற்காக எதை செலவு செய்ய வேண்டுமோ அதை அந்த நோக்கத்திற்காக செய்ய வேண்டும்.

டாக்டர் சாஹிப் எழுதுகிறார்: 1985 -ல் இருந்தே இவருக்கு இருதய நோய் இருந்தது. வாழ்க்கை இப்போது முடிந்து விடும் என்று ஒவ்வொரு முறையும் தோன்றும். ஆனால் அல்லாஹ் இவரை மரணத்தின் வாயிலிருந்து காப்பாற்றினான். பல செமினார்களில் நான் இவருடைய கேஸ் பற்றி கூறுவதுண்டு. இது ஒரு அற்புதமாகும் என்று டாக்டர்கள் கூறுவதுண்டு.

நான் கூறியது போன்று இவரை நான் பங்களாதேஷிற்கு அனுப்பினேன். அப்போதும் எனக்கு இவரைக் குறித்து கவலை இருந்தது. ஏனென்றால் இவர் உடல்நலம் சரியில்லாதவர் ஆவார். இவரை நான் அனுப்பியுள்ளேன். ஆரோக்கியமாகத் திரும்ப வேண்டும் என்று கவலைப்பட்டேன். அல்லாஹ் இவரை ஆரோக்கியமாகத் திரும்பக் கொண்டு வந்தது மட்டுமல்ல. அதன் பிறகு பல ஆண்டுகள் இவருக்கு நல்ல ஆரோக்கியமான வாழ்வை வழங்கினான்.

இவருடன் வேலை செய்து வரும் ஒரு முபல்லிக் ஹிபத்துர் ரஹ்மான் சாஹிப் எழுதுகிறார்கள்:

ஜாமிஆ அஹ்மதிய்யாவில், மஸீஹ் மவ்வூது தினக் கூட்டத்தில் இவருடைய ஒரு சொற்பொழிவு இருந்தது. பிரின்ஸிபலும் இதை எழுதியுள்ளார். பிரின்ஸிபல் சாஹிப் அவரை சந்திக்க வரும் போது நான் சொற்பொழிவை தயார் செய்து விட்டேன். நேற்று காலை 7.00 மணி முதல் 12.00 மணி வரை உட்கார்ந்து சொற்பொழிவைத் தயார் செய்தேன். ஆனால் இப்போது நான் மருத்துவமனையில் இருக்கிறேன். சொற்பொழிவு செய்ய முடியாது என்றார்கள்.

எல்லாவற்றையும் பற்றி அக்கறை இருந்தது. வேலையை முன்னதாகவே செய்து விடுவார்கள். நானும் இவருடன் அலுவலகத்தில் வேலை செய்திருக்கிறேன். ஏறக்குறைய 8 வருடங்கள் வேலை செய்துள்ளேன். இவரிடமிருந்து பல விசயங்களைக் கற்றுக் கொண்டேன். Drafting மிகவும் தரமானதாக இருக்கும். பட்ஜெட் தயார் செய்வதில் மிகவும் திறமை வாய்ந்தவராக இருந்தார். சில நேரம் இரவு 11/12 மணி வரை அலுவலகத்தில் வேலை இருக்கும். அப்போது பிறரிடம் வேலையை ஒப்படைத்து விட்டு வீட்டுக்குப் போய் விடாமல் உடனிருந்து வேலையை முடித்து விட்டு பிறகு தான் செல்வார்கள். முழு இரவும் பணியிருந்தாலும் இவ்வாறு செய்வார்கள். மிகவும் தூய்மையான மற்றும் விசுவாசம் கொண்டவராக இருந்தார்.

நான் முதலில் இவருக்குக் கீழ் வேலை செய்து வந்தேன். பிறகு நாஸிர் ஆலா ஆன பின்பு இவரிடம் கட்டுப்படும் உணர்வு அதிகமாக இருப்பதைப் பார்த்தேன. கிலாஃபத்திற்குப் பின் தூய்மையும் விசுவாசமும் மிகவும் அதிகமாகி விட்டது. அல்லாஹ் இவரது பதவிகளை உயர்த்துவானாக! இவருடைய குழந்தைகளை, சந்ததிகளை கிலாஃபத்துடன் எப்போதும் ஒன்றி வாழக் கூடியவர்களாக ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **22.03.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456